சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**OS** 05/2015

2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31-ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திருமதி.கே.கிருஷ்ணபிரியா, எம்.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 31.10.2023

Dw1(சுப்பிரமணியம்)

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, மீண்டும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி மற்றும் 2ம் பிரதிவாதியின் தந்தை சி பி பழனிசாமி என்ன படித்துள்ளார் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளார். வாசாஆ 3 மற்றும் வாசாஆ 13 ஆவணங்கள் இயற்றப்பட்ட சமயம் மேற்படி சி பி பழனிசாமி நல்ல உடல் நிலை மற்றும் மனநிலையில் இருந்தாரா என்றால் ஆமாம். 04.01.2013 ல் தான் முதன் முதலில் சி பி பழனிசாமி உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றால் அது எனக்கு தெரியாது, அவர் இறந்த தேதி தான் எனக்கு தெரியும். சி பி பழனிசாமிக்கு என்ன காரணத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் இறந்த பின் தெரிந்து கொண்டேன். அவர் இறந்த அன்று அவர் அனுமதிக்கப்பட்ட அன்று கோவை பிஎஸ்ஜி மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் எத்தனை நாட்களாக மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. அவர் கிசிசையில் இருந்தபோது அவரை உடனிருந்த யார் கவனித்து வந்தனர் என்றால் எனக்கு தெரியாது. அவரை உடனிருந்து அவரின் மனைவி கவனித்தார் என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ13 மற்றும் வாசாஆ 3 ஆவணங்களில் உள்ள சொத்துக்களின் செக்குபந்தி ஒரே செக்குபந்தி தான் என்றால் சரி. பழைய க ச எண் 562/பி மற்றும் 563/பி ஆகியவற்றின் ரீச எண் 527/2 என்றால் சரி. மேற்படி காலை எண்ணில் வாசாஆ 3 கிரய பத்திரத்தின் படி 77 சென்ட் கிரயம் பெற்றுள்னேன் என்றால் சரியல்ல, 79-1/2 சென்ட் கிரயம் பெற்றுள்ளேன். மேற்படி 79-1/2 சென்ட் என்று நான் சொல்வதில் 2 -1/2 சென்ட் கிணறு உத்தி, வாரி, வாய்க்கால் உள்ள பொது இடம் என்றால் சரியல்ல, நான் ஒரே தாக்காக தான் 79-1/2 சென்ட்

வாங்கினேன், கிணறு, உத்தி, வாரி தனியாக வாங்கினேன். வாசாஆ 3 கிரய பத்திரம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு, அதில் சொத்து விவரத்தில் பு ஏ 0.77 வீஸ்தீரணமுள்ள புஞ்சை பூமிக்கும் அதற்கு உண்டான மாமூல் வழிநடைகள் பாசன பாத்தியங்களும் மேற்படி காலையில் உள்ள கிணற்றில் 1/6 பங்கு பாத்தியங்கள் சகிதமும், மேற்படி கிணற்றில் சுற்றியுள்ள உத்தி,வாரி, வாய்க்கால் இவைகளில் பங்குப்படி புஏ 0.02 – 1/2 விஸ்தீரணமுள்ள கிணறு பாத்தியம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வாசாஆ 13 ல் நான் ஒப்பந்தம் செய்ததாக சொல்லும் பூமி வாசாஆ 3 சொத்திற்கு எந்த திசையில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம், இரண்டு பூமிகளும் பொதுவாக இருந்ததால் சொல்லவில்லை. நான் கூறுவது போல் இரு பூமிகளும் பொதுவில் இருக்கவில்லை என்றும், அதனால் தான் வாசாஆ 3ல் குறிப்பிட்டு எல்லை கண்டு கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல, கிரய பத்திரத்திலும் பொதுவில் என்று தான் சொல்லப்பட்டுள்ளது. வாசாஆ 3 சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு, அதில் சொத்து விவரத்தில் செம்மாண்டம்பாளையம் ஐயங்காட்டு கந்தசாமி வகையறா பாக பூமிக்கும் கிழக்கு, கடலைக்காடு ஆறுமகக் கவுண்டர் வகையறா பாக பூமிக்கும் மற்றும் லேட் துரைசாமிகவுண்டர் மனைவி ராமாயம்மாள் ஆகியோர் பாக்ங்களுக்கும் தெற்கு , துரைசாமி கிவுண்டர் பாகத்திற்கும் மேற்கு கிழமேல் தார் ரோட்டிற்கும் வடக்கு என்று செக்குபத்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வாசாஆ 13 செக்குபந்தியில் நான் ஏற்கனவே கிரயம் வாங்கிய பூமி குறிப்பிடவில்லை என்றால் சரி. அவ்வாறு நான் ஏற்கனவே கிரயம் வாங்கிய பூமி செக்குபந்தியில் குறிப்பிடாததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. வாசாஆ 3 மற்றும் 13 பத்திரங்களில் வாதி, மற்றும் 1,2 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் சரி. மேற்படி ஆவணங்களில் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளை சேர்க்காததற்கு காரணம் அதில் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம், பழனிச்சாமிக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் அவர்களை சேர்க்கவில்லை. மேற்படி சொத்து பழனிச்சாமிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து அல்ல என்றும், வாசாஆ 1 பாக பிரிவினை பத்திரப்படி அவருக்கு வந்த சொத்து என்றால் பாகப்பரிவினையில் வந்த சொத்து தான் அவருக்கு தனிப்பட்ட சொத்து. பாகப்பிரிவினையில் வந்ததால் அந்த சொத்து அவருக்கு பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. ஆகையல் வாசாஆ 3 பத்திரத்தை ரத்து செய்ய வாதி பரிகாரம் கோர வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. சிபி பழனிசாமியின் அப்பா ஏற்கனவே நாச்சாயம்மாளுக்கு விற்ற பூமியில் 40 செண்ட மட்டும் சி பி பழனிசாமி பின்னிட்டு வாசாஆ 2 ன் படி கிரயம் பெற்றுள்ளார் என்றும், மேற்படி 40 சென்ட் போக விற்றகப்பட்ட

மற்ற பாக்கி பூமியில் பாகம் கேட்டோ உரிமை கேட்டோ சி பி பழனிசாமி வழக்கு எதுவும் தொடரவில்லை என்றால் சரி. சி பி பழனிசாமி வாசாஆ 2 கிரயம் வாங்கியபோது அவருக்கு 19 வயது என்றால் அது எனக்கு தெரியாது, மேஜராகிவிட்டார். அவ்வாறு கிரயம் பெற்ற சமயம் அவருடைய அப்பாவுடன் தோட்டத்தில் வேலை செய்தார் என்றால் சரியல்ல, தனியாக செங்கல் சூளை நடத்தியும், பஸ் கண்டக்டர் வேலை செய்தும் சம்பாதித்து வந்தார். அவ்வாறு தனியாக சம்பாதித்து வந்ததை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. பெரியண்ண கவுண்டரின் பாகத்தில் பேரன் பேத்திகளுக்கு பங்கு உள்ளது என்று அ வ எண் 48/2002 வில் வாதம் செய்துள்ளேன் என்றால் சரி. எந்தெந்த நபர்களை சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொல்கிறேன் என்றால் பெரியண்ண கவுண்டரின் பேரன் பேத்திகளான நல்லசிவம், சாந்தாமணி மற்றும் பெரியண்ண கவுண்டரின் மகள்கள் பாக்கியம் மற்றும் சௌந்தரம் ஆகியோர்களை சேர்க்காததால் இந்த வழக்கு பாத்திக்கப்பட்டுள்ளதாக சொல்கிறேன். பெரியண் கவுண்டரின் மகன் வெங்கடாசலத்தின் பிள்ளைகள் தான் நல்லசிவம் மற்றும் சாந்தி என்றால் சரி. அவர்களுக்கு இந்த வழக்கு சொத்தில் உரிமையில்லை என்றும், வாசாஆ 1 ல் அவர்களுக்கு தனியாக வேறு சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரி.

(குறுக்கு விசாரணை தொடர்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

Sd/-K.Krishnapriya, 31.10.23
Subordinate Judge,
Perundurai.

uploaded by SS